MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME - II ISSUE - 1 AUG -2024
E-ISSN : 2584 - 1238

# பாலவனத்தம் ஊர்ப் பெயர் ஆய்வு

முனைவர் **சு.வினோத்,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி.
vinodhanjac@gmail.com அலைபேசி எண் : 94438 69129

DOI 10.5281/zenodo.12754084.

Abstract :

Historians refer to literature, inscriptions, coins, etc. as sources of history. You can also check town names. The names of the towns are clearly and specifically indicative of history. It is necessary for the younger generation to know the history hidden in the names of the towns and the culture that has come from it. In general, the people living in the town are ignorant of the name of the town.

Key Words : History - Ancient Literature - Town Old Generation

வரலாற்றை அறிய உதவும் மூலங்களாக இலக்கியங்கள் கல்வெட்டுகள் செப்பேடுகள் நாணயங்கள் போன்றவற்றை வரலாற்று ஆசிரியர்கள் கூறுவர். அதனோடு ஊர்ப்பெயர்களையும் சோத்துக்கொள்ளலாம். ஊர்ப் பெயர்கள் வரலாற்றை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் உணர்த்தியபடி உள்ளன. ஊர்ப் பெயர்களில் ஒளிந்துள்ள வரலாற்றையும் அதன் வழிப்பட்ட பண்பாட்டையும் இளந்தலைமுறையினர் அறிந்திருப்பது அவசியமாகும். பொதுவாக ஊரில் வாழ்பவர்களே அவ்வூர்ப் பெயர் குறித்த விபரம் ஏதும் அறியாதிருக்கும் அறியாமையைக் காண முடிகிறது. அது குறித்த குற்ற உணர்ச்சியும் அவர்களுக்கு இருப்பதில்லை. இளம் தலைமுறைக்குத் தனக்கு முந்தைய தலைமுறையுடனான தொடர்பறுந்து இருப்பதால் வரலாற்று அறிவின் தொடர்பும் அறுந்துள்ளது. ஊரின் மூத்த தலைமுறையினர் அறிந்திருந்து, சொல்வதற்குத் தயாராகவும் இருக்கின்ற ஊர்ப் பெயர்களின் வரலாற்றை அறிவது பயனுள்ளதாகும். இது அடுத்த தலைமுறைக்கு வரலாற்றைப் பத்திரப்படுத்துவது போன்ற செயல் ஆகும்.

சரித்திரப் பின்னணி, அழகியல் உணர்வு, சுற்றுச்சூழலை மதித்துப் போற்றிய அக்கறை, பாமர மக்களின் வெள்ளந்தியான பேச்சுவழக்கு, உயரிய குறிக்கோள் முதலியவற்றை எதிரொலிக்கும் முறையில் தமிழகத்தின் ஊர்ப்பெயர்கள் அமைந்திருத்தல் காணலாம்" (ம.பெ.சீனிவாசன், பேச்சில்லாக் கிராமம், ப.49) என்ற ம.பெ.சீயின் கருத்து நினைவுகூரத் தக்கது.

அவ்வகையில், விருதுநகர் மாவட்டத்தில் விருதுநகரிலிருந்து அருப்புக்கோட்டை செல்லும் சாலையில் அமைந்துள்ள 'பாலவனத்தம்' ஊர்ப் பெயர் குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## நால் வகை நிலங்கள்


http://Creativecommons.org//license/by/4.0/.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று நிலங்களுக்குப் பண்டைத் தமிழர் பெயர்ச் சூட்டியுள்ளனர். இதனைப் புவியியல் அறிவு மற்றும் இயற்கையைப் போற்றும் பண்பின் சாட்சியாகக் கொள்ளலாம்.

**"நாடா கொன்றோ காடா கொன்றோ**
**அவலா கொன்றோ மிசையா கொன்றோ**
**எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே" (புறம் : 187)**

என்ற ஔவையின் பழம்பாடல் நான்கு வகைத் தன்மையுடைய நிலங்களைச் சுட்டுகிறது. அதில் நாடு என்பது மருதநிலம், காடு என்பது முல்லை நிலம், அவல் என்பது பள்ளமான நெய்தல் நிலம், மிசை என்பது உயரமான குறிஞ்சி நிலம். இந்நால்வகை நிலத்து இயற்கையை ஒட்டியே அந்நாளில் பெயரிடுதல் முறை நடைபெற்று வந்துள்ளது. தொல்காப்பியர் குறிப்பிடும் கருப்பொருள்களில் நால்வகை நிலங்களின் ஊர்ப்பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இயற்கைப் பெயர் சூடிய ஊர்கள் மக்களின் இயற்கை போற்றும் பண்பாட்டு மனதை உணர்த்துகின்றன. வரலாற்றுப் பெயர் சூடிய ஊர்கள் அவ்வூரின் வரலாற்றுப் பெருமையினையும் பெருமிதத்தினையும் காட்டுகின்றன. புராண இதிகாச தெடர்புடைய ஊர்ப் பெயர்கள் வரலாறு புதைந்த புனைவாகத் திகழ்கின்றன.

தென் தமிழகத்தின் தென் மாவட்டங்களில் ஒன்றாகத் திகழும் விருதுநகர் மாவட்டம் இயற்கை கொஞ்சும் நில அமைப்பு கொண்டதல்ல என்ற போதும் வரலாற்றுச் சிறப்பும் கடும் உழைப்பை ஒட்டிய பண்பாட்டு விழுமியங்களும் கொண்டு விளங்குவதாகும். அம்மாவட்டங்களில் அமைந்துள்ள ஊர்ப்பெயர்களை ஆராய்வதன் வழியாக அப்பண்பாட்டு விழுமியங்களை அறியமுடியும்.

## விருதுவெட்டி - விருதுபட்டி - விருதுநகர்

விருதுநகர் என்பது, முந்நாளில் விருதுவெட்டி என்று இருந்து பின்னாளில் விருதுபட்டி என மாற்றமடைந்து இந்நாளில் விருதுநகர் என்றாயிற்று என்பது செவிக்கூற்று வழி நிலைநிறுத்தப்பட்டுள்ள வரலாறாகும். எவ்வூர்ப் பெயரை நோக்கினாலும் கால ஓட்டத்தில் மாற்றம் அடைந்தே இன்றைய சொல்வடிவத்தை அடைந்திருக்கும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. மாற்றத்திற்கான காரணங்கள் சரிவர அறியமுடியாத நிலையில் கற்பனையாலும் பெருமையாலும் இட்டு நிரப்புகின்றனர்.

விருதுநகர் 'விருதுவெட்டி' என்று அழைக்கப்பட்டதற்குக் கூறும் காரணமானது, விருதுகள் பல பெற்ற மல்லன் ஒருவன் ஊர்கள்வழியே வருகின்ற போது அவ்வவ்வூரில் இருப்போரைத் தன் வலிமையால் சவால்விட்டு அழைத்துள்ளான். அப்படி அழைத்த அவனை குறிப்பிட்ட இடத்தில் உள்ள பலசாலி ஒருவன் வெல்கிறான். மல்லன் பெற்ற விருதுகளை வெட்டியமையால் அதாவது வென்று கைக்கொண்டமையால் 'விருதுவெட்டி' என்று அவ்வூர் பெயர் பெறலாயிற்று என்று


http://Creativecommons.org//license/by/4.0/.

சொல்லப்படுகிறது. அதுவே பின்னாளில் 'விருதுபட்டி' என்று பெயர் மருவியது என்றும் இந்நாளில் விருதுநகர் என்றானது என்பதும் அவ்வூர் மக்களின் நம்பிக்கையாகும்.

'வெட்டி' என்பது 'பட்டி' என்று திரிபடைவதற்கு மொழி வரலாற்று நோக்கில் சான்றுகள் ஏதும் இல்லை. அதோடு 'பதினெட்டு பட்டி' என்ற ஊர்களின் கூட்டு அமைப்பு ஒன்று தென்நிலப்பகுதிகள் தோறும் திகழ்ந்துள்ளன. அவை எவையும் வெட்டி என்பதன் திரிபால் வந்தவை அல்ல. விருதுபட்டி என்ற நிலப்பகுதிக்கு அருகிலேயே கோட்டப்பட்டி, ரோசல்பட்டி, பாரப்பட்டி என ஊர்கள் பல உள்ளன. அவை தமது பழம் பெயர்களிலேயே இன்று வரை அழைக்கப்பட்டு வருகின்றன. எனவே ஊர்ப் பெயருக்குச் சொல்லப்படும் வீரம் சார்ந்த வரலாற்றுக்கதை பொருத்தமற்றதாகிறது. தேசாந்திரியாக வந்த மல்லன் ஒருவனை ஊர்ப்பயில்வான் ஒருவன் வென்ற நிகழ்வு நடந்திருக்கக்கூடும் என்றாலும் அதன் காரணமாக ஊர்ப்பெயர் வழங்கப்பட்டிருக்க வாய்ப்பு இல்லை.

தொடக்க காலத்தில் ஓர் ஊருக்கான பெயர் அவ்வூர் வாழ் மக்களால் சூட்டப்பட்டதாக இருந்திருக்க வாய்ப்பில்லை. அவ்வூரை அடையாளப்படுத்தி அறிய வேண்டிய அவசியம் வெளியூர் மக்களுக்கே உண்டு. அவ்வூரை மற்ற ஊர் மக்கள் சொல்லிச் சொல்லியே பெயர் என உருவாகியிருக்க வேண்டும்.

ஆனைக்கூட்டம், மத்தியசேனை, திருத்தங்கல் என முறையே இயற்கை, அரசியல், வரலாறு, சமயக் காரணங்களை ஒட்டி பெயர் சூட்டப்பெற்ற ஊர்களை மேலும் ஆராய்ந்து அறிவது பயனுடையதாகும்.

### பாலவனத்தம் ஊரும் பேரும்

விருதுநகர் மாவட்டத்தில் விருதுநகரிலிருந்து அருப்புக்கோட்டை செல்லும் சாலையில் அமைந்துள்ள சிற்றூர் பாலவனத்தம். இவ்வூர் இன்றும் கிராமியத்தன்மையைத் தக்கவைத்துள்ளது. எனவே அவ்வூரில் புராதனமும் வரலாறும் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. இவ்வூரின் பெயர் குறித்து பல்வேறு கதைகள் வழங்கப்படுகின்றன.

மிகப்பழங்காலத்தில் வறண்டு காணப்பட்ட இயற்கையமைப்பின் காரணமாக பாலைவனமாகத் திகழ்ந்ததாகவும் அதனால் அப்பெயர் பெற்றது என்று ஒருசாரார் கூறுகின்றனர். இது பாலைவனம் - பாலவனத்தம் என்ற ஒலி ஒற்றுமையால் கூறப்பட்ட விளக்கமாக இருக்கவே வாய்ப்புள்ளது. இதனைச் சொல் மயக்கமாகக் கொள்ளலாம்.

பழங்காலத்தில் பூங்காவனமாக இருந்ததாகவும் அற்புதம் ஒன்று நிகழ்ந்த பின்னர் பாலவனத்தமாக மாறியது என்றொரு கதையும் கூறப்படுகிறது. மாடுகள் பெருகிய முல்லை நிலமாக பாலவனத்தம் இருந்தது என்று ஊரார் தெரிவிக்கின்றனர். பண்டைக்காலத்தில் இவ்வூரில் மேய்ச்சலுக்குச் சென்று திரும்பும் மாடுகளில் சில மடிவற்றி (பால்வற்றி) வீடு திரும்பக் கண்ட மாட்டின் உரிமையாளர்கள் அம்மாட்டினைப் பின்தொடர்ந்துள்ளனர். குறிப்பிட்ட ஓர் இடத்தில் மாடுகள் தானாகவே பாலைச் சொரியக் கண்டுள்ளனர். அம்மாடுகள் பால் சொரிந்த இடத்தைத்


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

தோண்டிய போது அங்கு பத்திரகாளி அம்மன் சிலை கண்டெடுக்கப்பட்டதாகக் கூறுகின்றனர். பசுக்களின் பால் பெருக்கில் அபிசேகம் கண்ட பத்திரகாளிக்குக் கோவில் எடுத்து பால் அபிசேகம் செய்து வழிபட்டுள்ளனர். அதன் காரணமாகப் 'பால் வன நத்தம்' என்று ஊர் பெயர் பெற்று, அப்பெயர் பின்னாளில் மருவி 'பாலவனத்தம்' என்றானது என்கின்றனர். இக்கதையின் வரலாற்றுச் சாட்சி போல் அங்கு 'ஓய' மரத்தடியில் அமர்ந்த பத்திரகாளியம்மனின் பழைய கோவில் ஒன்றும் உள்ளது. காலப்பழமையைப் பறைசாற்றும் வகையில் ஓய மரம் கல்மரமாக மாறியநிலையில் உள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்புவரை அவ்வூரில் மாடுகளின் பெருக்கத்தால் பால் வளம் பெருகி அருகாமை ஊர்களின் உள்ள பால்பண்ணைகளுக்கெல்லாம் பால் விநியோகம் நடைபெற்றுள்ளது என்று தகவல் தெரிவிக்கின்றனர். அதன் காரணமாக 'பால் வள நத்தம்' என்று பெயர் வழங்கி அது நாளடைவில் 'பாலவனத்தம்' என்றானது என்றும் கூறுகின்றனர். அவ்வூரில் இன்றும் நீர் வறண்ட நீரோடை ஒன்றுள்ளது அதைப் பாலோடை என்ற பெயரில்; அழைக்கின்றனர்.

பாலை நிலமாக விளங்கி பாலவனத்தம் என்று இவ்வூர் பெயர் பெற்றிருக்க வாய்ப்பில்லை என்றே தோன்றுகிறது. இந்தியப் பெருநிலப்பகுதியில் பாலைவனம் என்று அறியப்படும் நிலமும் தமிழ்நாட்டின் பாலை நிலமும் வேறுபட்டவை.

பக்தியோடு தொடர்புபடுத்தி உரைக்கப்படும் பசுக்கள் தானே பால் சொரிந்ததாகக் கூறப்படும் கதை தலபுராணங்கள் வழியாகக் கட்டமைக்கப்பட்டதாக இருக்கக் கூடும். மதுரையில் மாணிக்க வாசகர் பிறந்த திருவாதவூர் சிவபெருமான் கோவிலுக்கும் இதே தலபுராணக் கதை கூறப்படுகிறது. பெரியபுராணக் கதைகளில் ஒன்றாகவும் இது இடம்பெற்றுள்ளது.

இக்கதைகளை ஒப்பு நோக்க, மாடுகள் நிறைந்திருந்த முல்லை நிலமாகப் பாலவனத்தம் இருந்திருக்கக் கூடும். மாடுகளின் பெருக்கத்தால் பால் வளம் பெற்ற ஊராக மற்ற ஊரரால் அறியப்பட்டிருக்க வேண்டும். எனவே 'பால் வள நத்தம்' என்று பெயர் பெற்றுக் கால மாற்றத்தில் பாலவனத்தம் என்றானது என்பது ஏற்புடையதாக உள்ளது.

## பாலவனத்தம் தலபுராணம்

ஊர் எழுந்து கோயில் எழுந்த காலகட்டத்தில் மக்கள் தாங்கள் கட்டி எழுப்பிய கோயில்களுக்குத் தலபுராணங்கள் இருக்க வேண்டும் என்று விரும்பியுள்ளனர். புலமை நிறைந்த கவிவாணர்கள் பலரும் நாடோடிகளாக வாழ்ந்து வந்த காலத்தில் ஊர் தோறும் அவர்களைத் தலபுராணங்கள் பாடக்கேட்டுள்ளனர். அவ்வாறு அவர்கள் பாடி வழங்கிய தலபுராணங்களைப் பல ஊர்களிலும் இன்றும் காணமுடிகிறது.

**"அடங்கல் பெருத்த வனமாம் - இது**
**ஆவினங்கள் மேய்ப்பதற்கு ஏற்ற இடமாம்"**


http://Creativecommons.org//license/by/4.0/.

என்று அவ்வூர் குறித்துக் கவிராயர் பாடிக் கொடுத்த பாடலை ஊர்ப் பெரியவர் ஒருவர் நினைவில் இருந்து பாடுகிறார். அப்பாடலின் அச்சுவடிவம் ஊரில் எங்கும் பாதுகாக்கப்படவில்லை. இது ஊருக்குத் தலபுராணங்கள் பாடும் வழக்கத்தை ஒட்டிய காலத்தில் எழுந்த பாடலாக இருக்கக் கூடும்.

## சமண எச்சம்

இவ்வூரில் மகாவீரர் என்று அறியப்படும் சமணர் சிலை ஒன்று உள்ளது. மதுரையைச் சுற்றிலும் உள்ள சமண மலைகளில் வாழ்ந்த சமணர்களின் வாழ்வியல் எச்சங்களான படுகைகள் உள்ளிட்டவைகள் ஏதும் இல்லாமல் ஒரு சிலை மட்டிலுமாக உள்ளது. சமண சமயத்தைச் சேர்ந்த ஜெயின் மக்கள் சித்திரை மாதத்தில் வந்து வணங்கிச் செல்வதாக ஊரார் கூறுகின்றனர்.

## பாலவனத்தம் ஜமீன்

நான்காம் தமிழ்ச்சங்கத்தை நிறுவிய பாண்டித்துரைத் தேவர் ஜமீனாக ஆட்சி செலுத்திய ஊராக இந்தப் பலவனத்தம் இருந்துள்ளது. இவ்வூரின் வரலாறு மேலும் சான்றுகளுடன் நூல்வடிவம் பெறுவது பயனுடையது ஆகும்.

## முடிவுரை

சிற்றூரான பாலவனத்தம் ஊர்ப்பெயர் கொண்டு ஆராயப்படுகின்ற வரலாற்றையும் நம்பிக்கைக் கதைகளையும் அறியமுடிகிறது. ஊர்ப்பெயர் குறித்த சொல்லாடல்கள் நம்பிக்கை, புராண, வரலாற்றுத் தன்மைகளுடன் நிலவுகின்றன. இவ்வூர்ப் பெயர்க் காரணத்தை மேலும் ஆராய்ந்து அறிவதன் வழி அதன் வரலாற்றையும் மொழி வளத்தையும் போற்றமுடியும். இவ்வூர்ப் பெயர் ஆய்வு ஒரு தனி நூல் அளவிற்கு விரியக்கூடிய வரலாற்றை உள்ளடக்கியதாகும்.

## தகவலாளர்கள்

பாலவனத்தத்தைச் சேர்ந்த பி.பி.சுப்பையா (வயது 70), ஸ்ரீனிவாசப் பெருமாள் (வயது 55) ஆகியோர் தகவலாளர்களாக இருந்து ஊர் பற்றிய வரலாற்றைப் பகிர்ந்துகொண்டனர்.

## துணை நூல்கள்

1. புலியூர்க் கேசிகன், புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, 2010
2. சீனிவாசன் ம.பெ., பேச்சில்லாக் கிராமம், சந்தியா பதிப்பகம், சென்னை, 2021,


http://Creativecommons.org//license/by/4.0/.